பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

01-08-2025 **FRIDAY** 6.30 PM
வணக்கம் – மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உந்துசக்தியாக மாணவர்கள் திகழ வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.
2. தமிழகத்தில் இதுவரை 22 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான 15 ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
3. தமிழக அரசின் திட்டங்கள் குறித்த விளம்பரங்களில் முதலமைச்சரின் பெயர் இடம்பெறக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
4. ஆணவப் படுகொலைகளை தடுப்பதற்கான தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டியதன் அவசியத்தை ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தின் தலைவர் திரு. தமிழ்வாணன் வலியறுத்தியுள்ளார்.
5. ஆசிய பாரா Taekwondo சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உந்துசக்தியாக மாணவர்கள் திகழ வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

Dhanbad ஐஐடி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மனிதவள ஆற்றலே நாட்டின் வலிமை என்றும அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகளில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் இதுவரை 22 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான 15 ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இவற்றில் 9 திட்டங்கள் புதிய வழித்தடங்களுக்கானது என்று கூறினார்.

*3 அகல ரயில் பாதை திட்டங்கள் என்றும், எஞ்சிய 3 இரட்டை வழித்தடங்கள் அமைக்கும் பணிகள் என்றும் அவர் தெரிவித்தார். ஆயிரத்து 700 கிலோமீட்டர் தொலைவுக்கான இப்பணிகளில் இதுவரை 565 கிலோமீட்டர் தொலைவிலான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் திரு. அஷ்விணி வைஷ்ணவ் கூறினார்.*

\>>>>>><<<<<<

*நாடளுமன்ற நடவடிக்கைகள், சுமுகமாக நடைபெற திட்டமிட்டே எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்காமல் உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.*

*புதுதில்லியில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், ஆப்பரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.*

*இருப்பினும், அவை நடவடிக்கைகளை எதிர்க்கட்சி முடக்கி வருவதாக அவர் கூறினார்.*

*மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*நாட்டின் கண்ணியத்தை காக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் செயல்பட வேண்டும் என்றும் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக் கொண்டார்.*

\>>>>>><<<<<<

*ஆணவப் படுகொலைகளை தடுப்பதற்கான தனிச் சட்டத்தை இயற்ற மத்திய – மாநில அரசுகளிடம் பரிந்துரைக்கப்படும் என்று ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தின் தலைவர் திரு. தமிழ்வாணன் கூறியுள்ளார்.*

*நெல்லையில் மென்பொறியாளர் கவின் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் – தமிழ்வாணன் 37 செகண்ட்ஸ்)*

\>>>>>><<<<<<

*தமிழக அரசின் திட்டங்கள் குறித்த விளம்பரங்களில் முதலமைச்சரின் பெயர் இடம்பெறக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பாக, அஇஅதிமுக மாநிலங்களவை உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா, நீதிபதி சுந்தர்மோகன் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.*

*கட்சித் தலைவர்களின் புகைப்படத்தையோ, முன்னாள் முதலமைச்சர் புகைப்படத்தையோ பயன்படுத்துவது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*விவசாயிகள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்பட்டு வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*இன்று தூத்துகுடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் வேளாண் மேம்பாட்டு திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.*

*அஇஅதிமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால், திமுக அரசால் கைவிடப்பட்ட தாமிரபரணி – வைப்பாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.*

*>>>>>><<<<<<*

*2023ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*புது டெல்லியில் தற்போது நடைபெற்று வரும் செய்தியாளர் சந்திப்பில் விருது குறித்த விவரங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.*

*தமிழில் சிறந்த திரைக்கதைக்கான விருது ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கிய பார்க்கிங் திரைப்படத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பாடலுக்கான சிறந்த இசையமைப்பாளருக்கான விருது வாத்தி திரைப்படத்திற்காக ஜி.வி. பிரகாஷ் குமாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சிறந்த துணை நடிகருக்கான விருதுக்கு எம்.எஸ். பாஸ்கர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கான தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 7ஆம் தேதி தொடங்குகிறது.

மனுக்களை தாக்கல் செய்ய 21ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

>>>>>><<<<<<

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, பொய்யான குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், திரு. ராகுல் காந்திக்கு பலமுறை வாய்ப்பளித்தும் அதனை பயன்படுத்த அவர் தவறிவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

தற்பொது தேர்தல் ஆணையத்தின் அலுவலர்களை மிரட்டும் அளவுக்கு திரு. ராகுல் காந்தி செயல்படுவது ஏற்புடையதல்ல என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

வடகடலோரம் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த ஏழு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருச்சியில் உள்ள அரசு பள்ளியில், மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

*கன்னியாகுமரி மாவட்டத்தில் மூத்த குடிமக்களுக்கான இலவச ஆன்மிக சுற்றுலாப் பயணத்தை அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. தங்கம், பகவதி அம்மன் கோவிலில் இன்று தொடங்கி வைத்தார்.*

>>>>>><<<<<<

*நாமக்கல் மாவட்டத்தில் 90 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அதிநவீன தானியங்கி பால்பதன ஆலையின் கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*மதுரை ரயில்வே கோட்டத்தில் 3 மாத கால தூய்மைப் பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

*ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக குறைந்ததை அடுத்து, ஐந்து நாட்களுக்குப் பிறகு பரிசல் இயக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய பாரா Taekwondo சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 41 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் Saju தங்கப்பதக்கம் வென்றார்.*

*மகளிர் 47 கிலோ எடைப் பிரிவில் Lakshmi -யும், 65 கிலோ எடைப்பிரிவில் Linciyaவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

>>>>>><<<<<<

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் தொடக்க சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Suman Kumari வெற்றிபெற்றார்.*

*பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின், 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் அவர் சீன தைபே-யின் Meng Sin Cheng-யை வென்றார்.*

>>>>>><<<<<<

*Macau ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Lakshya Sen அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-14, 18-21, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் Zhu Xuan Chen-ஐ வென்றார்.*

>>>>>><<<<<<

*ஆல் இங்கிலாந்து ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Nithin Ragavender இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*பெர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-10, 21-14 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Eshan Neog-யை வென்றார்.*

>>>>>><<<<<<

*இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக Khalid Jamil நியமிக்கப்பட்டுள்ளார்.*

>>>>>><<<<<<

*இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 224 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை ஒரு விக்கெட் இழப்புக்கு 125 ரன் எடுத்துள்ளது.*

>>>>>>END<<<<<<